DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 37/2015 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 4 | Caste | : |
| Name | : முருகேசன் | Calling | : |
| Father / Husband Name | : ராமன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 26th June 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் டி.புதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக வேலைப் பார்த்து வருகிறேன். கடந்த 29.12.2014 ம் தேதி பகல் 02.00 மணியளவில் எனக்கு ஒருவர் போன் செய்து எனது அக்காவின் மருமகன் கார்மேல்ராஜ் LIC யிலிருந்து பணம் கட்டிவிட்டு ஒய்யவந்தான் விளக்கு அருகே இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது இண்டிகா கார் இடித்து விபத்துக்குள்ளானதாகவும் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த எனது அக்கா மருமகன் பலத்த காயம் அடைந்தார். அவரை அங்கிருந்தவர்கள் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் சிவகங்கை அரசு மருத்துவமனை சென்று காயம்பட்ட எனது அக்கா மருமகனை பார்த்தேன். அப்போது அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். மேற்படி விபத்து சம்பந்தமாக எனது அக்கா மகளான

Web Copy

சசீலா என்பவர் புகார் கொடுத்தார். மேற்படி சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் நீதிமன்றத்தில் சொன்ன சங்கதிகளைத் தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அக்கா மகள் ஆவார். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சிவகங்கை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். புகார்தாரர் எனது உறவுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம்**, **26.06.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy